ஆண்டு பட்டிகை வழக்கு எண்.25/2024

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, NATHAM

CC.No. 25/2024 LW- 10 PW- 4

Name : குபேந்திரன் ( புலன்விசாரணை அதிகாரி)

Father's/Husband's Name : ராமசாமி

Village : உசிலம்பட்டி

Taluk : மதுரை

District : மதுரை

Age : 74/2025

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 06th day of February 2025

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் 3:17 P.M. - 3:37 P.M.

( எதிரி ஆஜர், எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)

**(சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு அரசு தரப்பில் முதல் விசாரணை)**

1. நான் தமிழ்நாடு காவல் துறையில் ஆய்வாளராக பணிபுரிந்து ஓய்வு பெற்று தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கடந்த 20.02.2006ம் தேதி நான் நத்தம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்த போது நத்தம் காவல் நிலையக் குற்ற எண்.330/2000 சட்டப் பிரிவுகள் 468, 482 இ.த.ச. மற்றும் 4(1)(a), 4(1-A)(C)(1)(a) TNP Actன் படியான வழக்கு கோப்பை எனக்கு முன்பாக பணிபுரிந்த காவல் ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியம் அவர்கள் முதல் விசாரணை முடித்து பணி மாறுதலாகி சென்றதால் நான் எனது விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

2. பின்னர் சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை நான் விசாரித்தபோது அவர்கள் ஏற்கனவே சொன்னது போல் என்னிடமும் சொன்னதால் நான் மீண்டும் வாக்குமூலம் பதிவு செய்யவில்லை. காவல் ஆய்வாளர் திரு.பாலசுப்பிரமணியன் அவர்கள் கடந்த 09.07.2000 அன்று 16.30 மணிக்கு சாட்சிகள் செல்வமாறன் (V.A.O) மற்றும் பொம்மாணி (தலையாரி) ஆகியோர் முன்னிலையில் இவ்வழக்கின் எதிரி சிவஞானம் என்பவரை விசாரித்தபோது எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். **(எதிரி சிவஞானம் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

3. அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் மதுரை பெரியார் பேருந்து நிலையம் அருகில் உள்ள மேலப்பெருமாள் தெருவில் உள்ள கடை எண்.33 ல் அருப்புக்கோட்டை கூட்டுறவு சொசைட்டி ஒயின்ஸ் கடையில் வைத்து 180 ML அளவுள்ள மானிட்டர் கிறிஸ்டி பாட்டில் 12 யும், ஓல்டு மங்க் ரம் பாட்டில் 180 ML அளவுள்ள பாட்டில்கள் 2 யும் அதே சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **(சிவஞானம் என்பவர் மூலம் கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரியை தக்க வழிக் காவல் மூலம் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பியும் வழக்கு சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். (**படிவம் 91 அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

4. 10.07.2000 ம் தேதி காலை 9.00 மணிக்கு மதுரை கோவில்பட்டியைச் சேர்ந்த லெட்சுமண பெருமாள் என்பவரை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் பாண்டி மற்றும் அப்பாஸ் ஆகியோர் முன்னிலையில் விசாரணை செய்தபோது எதிரி தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். **(எதிரி லெட்சுமண பெருமாள் என்பவர் கொடுத்த ஒப்புதல்**

**வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** அதன் தொடர்ச்சியாக அன்றைய தினம் பகல் 12.30 மணிக்கு மதுரையில் உள்ள எதிரி லெட்சுமண பெருமாள் வீட்டின் முன்பு வைத்து அதே சாட்சிகள் முன்னிலையில் 180 ML அளவுள்ள மானிட்டர் விஸ்கி பாட்டில்கள் லேபிளுடன் கூடியது –2 மற்றும் 180 ML அளவுள்ள ஓல்டு மங்க் ரம் பாட்டில்கள் லேபிளுடன் கூடியது –2 ஆகியவற்றை அத்தாட்சியில் கைப்பற்றியுள்ளார். **(லெட்சுமணப் பெருமாள் என்பவர் மூலம் கைப்பற்றிய அத்தாட்சி அ.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**வழக்கு சொத்துக்களை முன்னிடுவதற்காக முதல் விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.**

மேற்படி சாட்சியத்தை, சாட்சி சொல்ல–சொல்ல, என்னால் திறந்த நீதிமன்றத்தில் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, சரிபார்க்கப்பட்டு பதிவு செய்யப்பட்டது. அதை சாட்சி படித்துப்பார்த்து, சரி என ஒப்புக்கொண்டு கையொப்பம் செய்தார்.

M.Nallakannan., B.Com., B.L.,

Digitally signed by M.Nallakannan., B.Com., B.L.,
Date: 2025.02.06 19:27:10 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
நத்தம்